21st November 1963]

Substitute for cement

* 397 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) whether any substitute for cement has been found out by the Highways Research Station ;

(*b*) the details thereof ; and

(*c*) whether any steps are being taken to produce this substitute on a large scale for the use of the public?

THE HON. SRI V. RAMAIAH : (*a*) No.

(*b*) & (*c*) Do not arise.

திரு. கே. மூக்கையா தேவர் : கனம் அமைச்சர் அவர்கள் மதுரையில் வந்து பேசிய கூட்டத்தில் சிமிண்டுக்குப் பதிலாக மாற்றுப் பொருள் கண்டு பிடிக்கும் ஆராய்ச்சியில் நிபுணர்கள் இறங்கியிருப்பதாகச் சொன்னார்கள். அது சம்பந்தமாக ஏதேனும் ஆராய்ச்சியாவது இருக்கிறதா ?

கனம் திரு. வெ. ராமைய்யா : கனம் அங்கத்தினர் அந்தக் கூட்டத்திற்கு வந்திருக்கமாட்டார் என்று நினைக்கிறேன். வீடு கட்டுவதற்குப் பல பொருள்களை நிபுணர்கள் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள் என்று சொன்னேன். சிமிண்டு இல்லாமல் சுண்ணாம்பு, இன்னும் இதர பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சி நடப்பதாகக் குறிப்பிட்டேனே தவிர சிமிண்டுக்கு வேறு பொருளைக் கண்டு பிடிக்க முடியும் என்று நான் சொல்லியிருக்க முடியாது. நிபுணர்களும் அப்படிக் கருதவில்லை.

Ten Commandments (Central Government)

* 398 *Q.*—SRI K. MOOKIAH THEVAR : Will the Hon. the Cheif Minister be pleased to state—

(*a*) whether the attention of the State Government has been drawn to the ten commandments issued by the Central Government to Government officials;

(*b*) if so, the details thereof;

(*c*) whether these commandments are to be applied to the All-India Personnel working in Madras State; and

(*d*) whether the Central Government have advised the Madras Government to follow suit and if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) **No.**

(*b*) to (*d*) Do not arise.

(*a*) இல்லை.

(b) to (d) கேள்விக்கு இடமில்லை.

பச்சைமலையில் சந்தனமரம் சாகுபடி

* *399* கேள்வி.—திரு. து. ப. அழகமுத்து : கனம் உணவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1962, 1963-ல் திருச்சி மாவட்டத்திலுள்ள பச்சை மலையில் உற்பத்தியாகும் சந்தன மரங்களின் மூலமாக சர்க்காருக்கு எவ்வளவு வருமானம் கிடைத்தது ?